பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,

மலர்: 20] சென்னை: ஆடி 6 (21—7—72) வெள்ளி

வெளியூர்: ஆடி 7 (22—7—72) சனி [இதழ்: 32

## கல்கத்தா நகரெங்கும் நக்சல்பாரிகள் வேட்டையாடப்படுகின்றனர்

### ரூ. 10 இலட்சம் செலவில் சிறைச்சாலைகள் சீரமைப்பு

கல்கத்தா, ஜூலை 21—

நக்சல்பாரி தீவிரவாதிகளைக் கண்டுபிடித்துக் கைது செய்வதில் கல்கத்தா நகரப் போலீசார் தீவிரமாக இறங்கியுள்ளார்.

தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 120 பேர்களை

(4-ம் பக்கம் பார்க்க)

# வீரபாகுவின் கோயபல்ஸ் வேலை

## நம்பியவர்களை நட்டாற்றில் விடுகிறது இந்திரா காங்கிரசு

### முதல்வர் கலைஞரின் மனிதாபிமான நடவடிக்கை

கடந்த ஜூலை 5 ஆம் நாள் தமிழ்நாட்டில், 'விவசாயிகள் கிளர்ச்சி' என்னும் பேரால் எதிர்க் கட்சியினர் தூண்டிவிட்ட வன்செயல்களின் விளைவாகத் துப்பாக்கிப் பாக்கிச் சூட்டுச்கும் பலியாகியும் -- நெரிசலில் சிக்குண்டும் இறந்தோர் தொகை 16 என்று அதிகார பூர்வமான தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது; இராசபாளையத்தில் தற்செயலாகத் துப்பாக்கி வெடித்ததால் மாண்ட போலீசுக்காரர் ஒருவரையும் சேர்த்து 17 பேர் மாண்டிருக்கின்றனர்.

ஆனால், புதுடில்லியில் நடந்த இந்திரா கட்சிக் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் தலைவர் சங்கர் தயாள் சர்மா, துப்பாக்கிச் சூட்டுக்கு 48 பேர் பலியானதாகக் கணக்குச் சொன்னார்.

இப்போது, சென்னையில் நடந்த இந்திரா கட்சிக் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்குப்பின் நிருபர்களிடம் பேசிய தமிழ்நாட்டு இந்திரா கட்சித் தலைவர் ஏ. பி. சி. வீரபாகு, 'துப்பாக்கிச் சூட்டால் இறந்தவர்கள் 22 பேர்' என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்.

"கூட்டத்தில் கலந்துகொண்ட பல மாவட்ட இந்திரா கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துப்படி, 22 பேர் மாண்டிருப்பதாகத் தெரிகிறது" என்று அவர் விளக்கமும் அளித்திருக்கிறார்.

தமிழக அரசின் அதிகாரபூர்வமான தகவலை முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊர் -- பெயர் உட்பட்ட பட்டியல் போட்டு வெளியிட்டிருக்கிறார்; 'இது தவறான கணக்கு' என்று இதுவரை எவரும் ஆதாரத்துடன் மெய்ப்பிக்க முன்வரவில்லை.

இந்திரா கட்சியின் பெரிய தலைவரான சங்கர் தயாள் சர்மா, '48 பேர்' என்கிறார்; குட்டித் தலைவரான வீரபாகு, '22 பேர்' என்கிறார்; அவர்களுக்குள்ளேயே முரண்பாடு.

இன்னும், மாவட்டத் தலைவர்களைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்வார்களோ தெரியாது!

துப்பாக்கிச் சூட்டில் இறந்த 14 பேர் -- தடியடி காரணமாக நெரிசலில் சிக்குண்டு மாண்ட இருவர் -- துப்பாக்கி வெடித்து மாண்ட ஒருவர் -- ஆக 17 பேர்களுடைய குடும்பங்களுக்கும் தலா ரூ 5,000 வீதம் ஆறுதல் நிதியளிக்கவும் முதலமைச்சர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

உள்ளபடியே மாண்டவர் தொகை 22 என்றால், அந்த 22 பேர்களுக்கும் ஆறுதல் நிதி கிடைக்குமாறு செய்யவேண்டியது -- போராட்டத்தை முன்நின்று நடத்திய சூத்திரதாரிகளின் கடமையல்லவா?

முதலமைச்சர் வழங்க முன்வந்துள்ள ஆறுதல் நிதியை மாண்டவர்களின் குடும்பங்களுக்குக் கிடைக்கச் செய்வதன்மூலம், அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் அளிக்க வீரபாகுவுக்கோ அவரது கட்சியின் மாவட்டத் தலைவர்களுக்கோ மனமில்லையா?

முதலமைச்சர் வெளியிட்டுள்ள பட்டியலில் இருக்கும் 17 பேர் குடும்பங்களுக்கு ஆறுதல் நிதி கிடைத்தால் போதும் என்று வீரபாகு திருப்தியடைந்துவிட்டாரா?

இறந்ததாக அவரால் கூறப்படும் 22 பேர்களுடைய குடும்பங்களில் 17 குடும்பங்களுக்கு மட்டும் இந்த ஆறுதல் கிடைக்கச் செய்துவிட்டு, எஞ்சியுள்ள 5 குடும்பங்கள் எக்கதியானால் என்ன என்று இருந்துவிட முடிவு செய்துவிட்டாரா அவர்?

அந்த ஐந்து குடும்பங்களின் நிலை என்ன? வீரபாகு போன்ற தலைவர்களை நம்பியவர்களின் குடும்பங்களுக்கு இந்தக் கதிதானா? நம்பியவர்களை நட்டாற்றில் விட்டுவிட்டுச் சுயலாப வேட்டையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தால் போதும் என்கிற நினைப்பா?

இறந்தவர்கள் -- முதலமைச்சர் கணக்குப்படி -- 17 பேர்தான் என்று ஏ. பி. சி. வீரபாகு முதல் சங்கர் தயாள் சர்மாவரை வெளிப்படையாக ஒப்புக்கொண்டாக வேண்டும்; இல்லையேல், அவர்களுடைய கணக்குப்படி இறந்தவர்கள் எண்ணிக்கையை (பேர் -- ஊர் -- முகவரி உட்பட) வெளியிட்டவேண்டும்.

இந்த இரண்டில் ஒன்றைச் செய்யாதவரையில், இந்திரா கட்சியினரை எவரும் நம்பமாட்டார்கள் -- இனி அவர்களை நம்பி எதிலும் இறங்கவும் மாட்டார்கள்!

கிளர்ச்சியின்போது இறந்தவர்கள் (முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அதிகாரபூர்வமான கணக்குப்படி) வருமாறு:—

அய்யம்பாளையம்:—முத்துக்குமாரசாமி, சுப்பையா

கோவில்பட்டி:—கந்தசாமி

(4-ம் பக்கம் பார்க்க)

# ஐ. நா.-வில் பணியாற்றும் ஊழியர் ஊதியம்

### 'மிக அதிகமானதாகும்' எனக் குழு அறிவிப்பு

ஐ. நா. ஜூலை 21—

"ஐ. நா.-வில் பணியாற்றும் ஊழியர்களின் ஊதிய நிலவரம், எந்த நாட்டு நிலைமையைவிடவும் மிகவும் அதிகமானதாகும்"

என்று இது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழு ஒன்று கருத்துத் தெரிவித்திருக்கிறது.

"அமெரிக்க அரசாங்க அதிகாரிகளின் சம்பளத்தைவிட 18.6 சதவிகிதத்திலிருந்து 35.2 சதவிகிதம் வரை ஐ. நா. ஊழியர்களின் சம்பளம் அதிகமாக இருக்கிறது"

என்று அந்தக் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

"அமெரிக்க அதிகாரிகளின் சம்பளத்தைவிட 15 சதவிகிதத்துக்குமேல் ஐ. நா. அதிகாரிகளின் ஊதியம் இருக்கக்கூடாது; ஆகவே, 1975-ம் ஆண்டுவரையில் ஐ. நா. அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு முடக்கச் செயல்படுத்தப்பட வேண்டும்"

என்றும் அக்குழு பரிந்துரை செய்திருக்கிறது.

ஐ. நா. தலைமையகத்தில் பணியாற்றும் சுமார் 6,000 ஊழியர்களின் பிரதிநிதிகள், இப்பரிந்துரை கண்டு சீற்றமடைந்திருக்கின்றனராம்!

# சுக்கிரனில் இரஷ்ய ராக்கெட்டு

மாஸ்கோ, ஜூலை 21—

"பூமியிலிருந்து 16 கோடி மைல் தூரத்திலுள்ள சுக்கிரனுக்கு இரஷ்யா அனுப்பியுள்ள 'வீனஸ்-8' என்ற ராக்கெட்டு நாளை சுக்கிரனில் இறங்குகிறது"

என்று இரஷ்யாவின் வெளித்துறை அறிவித்திருக்கிறது.

# ஆளுநர் பதவியை ஏற்க மறுப்பு

## மத்திய அமைச்சரவையிலிருந்து கே. அனுமந்தையா விலகல்

### தலைமையமைச்சர் யோசனையை நிராகரித்தார்

புதுடில்லி, ஜூலை 21—

மத்திய அமைச்சரவையிலிருந்து இரயில்வேத் துறை அமைச்சர் கே. அனுமந்தையா நேற்று இராஜிநாமா செய்துவிட்டார்.

தமது அமைச்சரவையில் சில மாறுதல்களைச் செய்ய விரும்பிய தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அனுமந்தையாவும் -- மற்றோர் அமைச்சரான மொய்னுல் ஹக் சௌதுரியும் விலக வேண்டுமென்று விரும்பியதாகத் தெரியவருகிறது; ஆயினும், அனுமந்தையாவுக்குக் கவர்னர் பதவி ஒன்றைத் தருவதற்குத் தலைமையமைச்சர் முன்வந்தார் என்றும், அதை அனுமந்தையா ஏற்க மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

அமைச்சர் பதவி இல்லையென்றால், தாம் ஒரு சாதாரண எம்.பி.-யாகவே இருக்க விரும்புவதாக அனுமந்தையா கூறினாராம்.

இராஜிநாமா செய்யும் மற்றோர் அமைச்சரான மொய்னுல் ஹக் சௌதுரிக்கு, முக்கியமான வெளிநாட்டுத் தூதுவர் பதவி ஒன்று அளிக்கப்படுமாம்.

அடுத்த இரயில்வே அமைச்சர் பதவி டி. ஏ. பாய் என்பவருக்கு வழங்கப்படலாம் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

அதுபோல், இந்திய வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கியப் பங்கேற்றுவரும் டி. பி. தார், அமைச்சரவையில் சேர்க்கப்பட்டு -- அவருக்குத் திட்ட அமைச்சர் பதவி அளிக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

இப்போது திட்ட அமைச்சராக இருந்துவரும் சி. சுப்பிரமணியத்துக்குத் தொழில் வளர்ச்சித் துறை ஒதுக்கப்படலாம் என்றும், மற்றும் துணை அமைச்சர்கள் சிலருக்குப் பதவி உயர்வோ--இலாகா மாற்றமோ செய்யப்படலாம் என்றும் தெரியவருகிறது.

அமைச்சரவை மாறுதல் குறித்துத் தலைமையமைச்சர் நேற்று குடியரசுத் தலைவரைச் சந்தித்து விவாதித்தார். தற்போது பெரிய மாறுதல் எதையும் செய்யப்போவதில்லை என்றும், அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்றதும் அநேகமாக செப்டம்பர் மாதவாக்கில் அமைச்சரவையில் பெரிய மாறுதல் செய்யப்படலாம் என்றும் அப்போது தலைமையமைச்சர் குடியரசுத் தலைவரிடம் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

அமைச்சரவை மாறுதல் குறித்த அறிவிப்பு விரைவில் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மாநில சுயாட்சிக்குப் பெருகிவரும் ஆதரவு

## ஜெயப்பிரகாச நாராயணன் வெளியிடும் தகவல்

### செப்டம்பரில் கட்சி சார்பற்ற மாநாடு கூட்ட ஏற்பாடு

சென்னை, ஜூலை 21—

"மாநில சுயாட்சிக் கோரிக்கை பற்றிய மாநாடு நடத்துவதென்ற என்னுடைய முயற்சிக்கு எல்லாத் தரப்பிலிருந்தும் நல்ல ஆதரவும் -- வரவேற்பும் இருக்கிறது.

"இந்த மாநாடு, செப்டம்பர் திங்கள் இறுதியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இதற்கான தொடக்கக் கட்டப் பணிகளில் எனது தோழர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

"இந்த மாநாடு எந்த ஓர் அரசியல் கட்சி சார்புமின்றி--முற்றிலும் பொதுப்படையாகவே நடைபெறும்.

"மாநாட்டை எங்கு நடத்துவது --யார் யாரை அழைப்பது-- என்பதுபோன்ற விவரங்கள் தயாராகி வருகின்றன"

என்று சர்வோதயத்தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் தெரிவித்திருக்கிறார்.

# காகித ஆலை நிறுவத்திட்டம்

## பிர்லா நிறுவனம் முயற்சி செய்கிறது

அலகாபாத், ஜூலை 21—

உத்தரப் பிரதேச மாநிலம் நைனிடாலில் கூட்டுத் துறையில் ஒரு காகித ஆலையை நிறுவ பிர்லா நிறுவனத்தினர் திட்டமிட்டுவருவதாக பிர்லா நிறுவனங்களின் தலைமை அதிகாரி மண்டேலியா இங்கு அறிவித்தார்.

"90,000 டன் உற்பத்தித் திறனைக் கொண்ட இந்த ஆலை, 1975-ம் ஆண்டில் இயங்கத் தொடங்கும்" என்றார் அவர்.

"இது குறித்த கடிதப் போக்குவரத்துப் பணிகள் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றன" என்று அவர் தெரிவித்தார்.

அலுமினியத் தொழிலின் நலனைக் கருதி, ஒரு மின் கட்டண அமைப்பை நிறுவுமாறு அவர் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டார்.

# சுதந்தர வெள்ளி விழா ஏற்பாடு -- தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பு

## விடுதலை வீரர்கள் சிறப்பிக்கப்படுவர் - திருப்பூர் குமரன் - வ. உ. சிதம்பரனார் உருவச் சிலைகள் திறக்கப்படும்

சென்னை, ஜூலை 21—

இந்தியாவின் விடுதலை நாள் வெள்ளி விழாவை இணையற்ற வகையில் கொண்டாட தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் விழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது; 75 பேர் அடங்கிய இந்தக் குழுவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

முதலமைச்சர் கலைஞர் தலைமைவகிக்கும் இந்த மாநில விழாக் குழுவின் அமைப்பாளர் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் பி. சபாநாயகம்; தமிழக அரசின் பொது நிர்வாகத் துறை துணைச் செயலாளர் எம். வைத்தியலிங்கம் இவ்விழாக் குழுவின் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றுவார்.

தமிழக அமைச்சர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் -- தென் மண்டல இராணுவ அதிகாரிகள் -- கடற்படை, விமானப் படை மண்டல அதிகாரிகள் -- போலீசுத் தலைமை அதிகாரி -- மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறை அதிகாரிகள் ஆகியோரடங்கிய விடுதலை நாள் வெள்ளி விழாக் குழுவின் முதல் கூட்டம் நேற்று முன்னாள் இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பேரவை எதிர்க் கட்சித் தலைவர் இராசாராம் நாயுடு, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., கே. டி. கே. தங்கமணி, அப்துல் வகாப், திருப்பூர் மொய்தீன், ஏ. ஆர். பெருமாள், ஏ. ஆர். மாரிமுத்து, சக்தி மோகன், டி. கே. சண்முகம், பேரவைத் தலைவர் -- பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் பலரும் கலந்துகொண்டு, விடுதலை நாள் விழாவைச் சிறப்புறக் கொண்டாடுவதற்கான பல ஆலோசனைகளை வழங்கினர்.

கூட்ட முடிவில் நன்றி தெரிவித்துப் பேசிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"சுதந்தர நாள் வெள்ளி விழாவையொட்டிக் கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைப்பது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

தியாகிகளுக்கு அளிக்கப்படும் மானியத் தொகை அதிகரிக்கப்படும்.

திருப்பூர் குமரனுக்குச் சிலை வைக்கப்படும்.

சுதந்தரப் போராட்டத்தில் தண்டனையடைந்த -- இப்போது உயிரோடு இருப்பவர்கள் சிறப்பிக்கப்படுவார்கள்.

சுதந்தர வெள்ளி விழாவையொட்டித் தமிழ்நாடு சட்டப்பேரவை-- மேலவை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம், ஆகஸ்டு 14-ம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு நடைபெறும்; ஆளுநர் பேசுவார்.

ஆகஸ்டு 15-ம் நாள் மாலை நடைபெறும் சுதந்தர நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பேசுவர்; இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் அழைக்கப்பட்டிருக்கிறார்.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவையொட்டி, செப்டம்பர் 5-ம் நாள் தூத்துக்குடியில் அவர் சிலை திறக்கப்படும்; இதைத் திறந்துவைக்கத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது."

# தமிழகத்துச் சிறை வசதிகள் திருப்திகரம்

## மேற்கு வங்க இடது கம்யூனிஸ்டு எம்.பி. பகரும் சான்று

சென்னை ஜூலை 20—

மேற்கு வங்க மார்க்சிஸ்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிர்மயி பாசு கடலூர் சிறைக்கும் போய் அங்குள்ள மேற்கு வங்க அரசியல் கைதிகளைப் பார்த்துத் திரும்பினார்.

"கடலூர் சிறையில் காவலில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள் பற்றி புகார் கூற ஏதுமில்லை" என்றார்.

கடலூர் சிறையில் உள்ள வாழ்க்கை நிலை பற்றி பாதுகாப்புக் கைதிகள் திருப்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

மேற்கு வங்கச் சிறைகளில் உள்ள நிலைமைகளோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் நிலைமை பெருமளவுக்கு நன்றாக இருக்கிறது.

இந்தத் தகவல், 18—7—72 'மெயில' இதழில் புதுடில்லி செய்தியாளரால் தரப்பட்டுள்ளது.

# மணலியில் தீவிபத்து

சென்னை ஜூலை 21—

மணலி எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையில் நேற்று நள்ளிரவில் பெரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டது.

இரவு சுமார் 11-30 மணியளவில் 5,000 டன் மண்ணெண்ணெய் கொள்ளும் டாங்கி ஒன்றில் தீ பிடித்ததாகக் கூறப்படுகிறது.

உடனே சென்னையிலிருந்தும் -- சுற்றுப் பகுதிகளிலிருந்தும் தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டனர்.

சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் மணலியில் ஏற்பட்ட தீவிபத்தின் சுடர்கள் நகரிலிருந்தே காண முடிந்தது.

அருகிலிருக்கும் மற்ற டாங்கிகளுக்கும் தீ பரவாமல் தடுக்கப்பட்டது; இதுபோல் சுமார் 150 டாங்கிகள் அங்கே இருக்கின்றன; இவைகள் தண்ணீர்த் தடுப்புகளால் பாதுகாக்கப்பட்டு வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்துக்கான காரணம் ஆராயப்பட்டுவருகிறது.

தீப்பிடித்த நேரத்தில் இடிச் சத்தம் ஒன்று கேட்டதாகவும், அப்போது ஏற்பட்ட மின்னலால் தீப்பிடித்திருக்கலாம் என்றும் அப்பகுதி ஊழியர்கள் சிலர் தெரிவித்தனர்.

## இந்தியாவுக்கு ரூ. 14.17 கோடி கடன்--நெதர்லாந்து அளிக்கும்

புதுடில்லி, ஜூலை 21—

இந்தியாவுக்கு ரூ 14.17 கோடி கடன் அளிக்க நெதர்லாந்து நாடு முன்வந்திருக்கிறது.

இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

ஜூலை 22 காலை 10 மணி: குற்றாலம்—தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் மாநாடு.

ஜூலை 23 காலை 9 மணி: திருநெல்வேலி—தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்; மாலை 3 மணி: குற்றாலம்—மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்.

ஜூலை 24 காலை 10 மணி: குற்றாலம்—மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்; மாலை 4 மணி: கூட்டுப் பொறுப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்; 6 மணி: தென்காசியில் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

ஜூலை 25 காலை 10 மணி: குற்றாலம்—கூட்டுப் பொறுப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளல்; மாலை 4 மணி: வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

ஜூலை 26 காலை 10-30 மணி: குற்றாலத்தில், திருநெல்வேலி—கன்னியாகுமரி மாவட்டச் சீரணிக் கருத்தரங்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுதல்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

## மன்னை நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

ஜூலை 23 காலை 9-30 மணி: தஞ்சாவூர்—குடிநீர் வடிகால் வாரிய மாவட்டக் கருத்தரங்கைத் துவக்குதல்; மாலை 6-30 மணி: மன்னார்குடி—கூட்டுறவு பால் வழங்கு சங்கம் பாராட்டு விழா; இரவு 7 மணி: அன்னவாசல—பொதுக் கூட்டம்.

ஜூலை 24 காலை 9-30 மணி: திருச்சி—குடிநீர் வடிகால் வாரிய மாவட்டக் கருத்தரங்கைத் துவக்குதல்; இரவு 8 மணி: கும்பகோணம்—பொதுக்கூட்டம்.

## சி. பி. கனகசபை

நிகழ்ச்சிகள்

ஜூலை 25: உடையார்பாளையம்; 26 பேட்டை; 27 பாபநாசம் வட்டம்; 29 சீர்காழி; 30 புத்தூர்.

# கழக அரசு கவிழ்ந்தால் நட்டம் யாருக்கு?

## ஜனநாயக விரோதச் செயல்களுக்கு இடந்தர வேண்டாம்

### பிற்பட்ட -- ஏழை எளிய மக்களுக்கு எஸ். எஸ். இராமசாமி படையாச்சி அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 20—

"கலைஞர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுவரும் கழக அரசு கவிழ்ந்தால் அது பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் நட்டமாகும்"

என்று 15—7—72 அன்று சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற வன்முறைக் கண்டன நாள் கூட்டத்தில், உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ்.எஸ். இராமசாமி படையாச்சி தெரிவித்தார்; அவர் மேலும் பேசியதாவது:—

"வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும்-- எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அதனை அனுமதிக்க முடியாது.

நடைபெற்ற வன்முறைச் செயல்கள் அருவருக்கத்தக்க முறையில் நடைபெற்றிருக்கின்றன; இந்தப் போக்கு நீடித்தால் ஜனநாயகத்திற்கே ஆபத்து ஏற்படும்.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பேச்சுவார்த்தைகள் மூலம் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும்; அதனை விட்டுவிட்டு, வன்முறையில் ஈடுபடுவது என்பதை யாரும் விரும்பமாட்டார்கள்!

'விவசாயிகள் பிரச்சினையில் ஏன் இப்படி முதல்வர் நடந்துகொள்கிறார் -- அவர்களைச் சந்திக்க விரும்பவில்லையா' என்றெல்லாம் நான்கூட நினைத்தேன்; ஆனால், அந்த எண்ணத்தை நான் மாற்றிக்கொண்டு விட்டேன்.

முதல்வர் அவர்கள் விவசாயிகள் பிரச்சினையை அணுகித் தீர்வு காண விருப்பத்தோடுதான் இருந்தார்; ஆனால் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி அரசியலில் இலாப வேட்டை ஆடலாம் என்று நினைத்த அரசியல் கட்சிகளுக்குச் சரியான பாடம் புகட்டும் வகையில் இந்தப் பிரச்சினையை அணுகி அவர் வெற்றி கண்டுவிட்டார்.

அண்மையில் விவசாயிகள் சங்கத் தலைவர்களை முதல்வர் கூட்டிப் பேசினார்.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் குறைவுதான்; நானும் விவசாயம் செய்கின்றவன்தான்; இதில் என்ன சங்கடம் இருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை.

'இந்தக் கட்டணத்தைக் கட்ட முடியவில்லையா' என்று நானும் பல விவசாயிகளைக் கேட்டேன்; 'அப்படி ஒன்றும் இந்தக் கட்டணம் உயர்வு அல்ல' என்று விவசாயிகள் கூறினார்கள்.

ஆனால் இந்தச் சிறிய உயர்வை ஒரு பிரச்சினையாக்கி--வன்முறைகளைத் தூண்டிவிட்டுக் கழக அரசைக் கவிழ்க்க யாராவது முயல்வார்களானால், அதனால் தூண்டிவிடுவோருக்கு நட்டமில்லை--ஏழை எளிய--பின் தங்கிய மக்களுக்குத்தான் நட்டம்; இதனைப் புரிந்து செயல்படவேண்டும்.

கழக அரசைக் காப்பதுதான் நம்முடைய கடமை; கழக அரசைப் பாதுகாத்தால்தான் நாம் அனைவரும் காப்பாற்றப்படுவோம்."

# அரசியல் சட்டத்தைக் காட்டி மிரட்டுகிறார் மத்திய கல்வியமைச்சர்

## இந்தியை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமாம்

### இந்தி பேசா பகுதிகளில் அதைத் திணிக்கத் துடிக்கிறார்

புதுடில்லி, ஜூலை 20—

"இந்தி மொழி வழங்காத பகுதிகளில் இந்தி மொழியை விரைவில் பரப்ப நாம் புதிய வழிமுறைகளைக் கண்டறிந்தாக வேண்டும்.

"இந்தி மொழியைக் கவர்ச்சி மிக்கதாகவும் -- வளம் மிக்கதாகவும் -- எளிமையானதாகவும் ஆக்கவேண்டும்; அம்படிச் செய்துவிட்டால், இந்தி வெகு விரைவிலேயே இந்தியாவின் இணைப்பு மொழி என்ற தகுதியைப் பெற்றுவிடும்"

என்று மத்திய கல்வித்துறை அமைச்சர் நூருல்ஹாசன் கூறியிருக்கிறார்:—

இந்திமொழியைக் கற்பிக்கும் 'இந்தி சிக்சா சமிதி' என்ற அமைப்பின் 25வது ஆண்டுக் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"இந்திமொழியில் பிற இந்திய மொழிச் சொற்களையும் சிறிதளவு கலக்கவேண்டும்; அது இந்தியை வளப்படுத்துவதோடு, 'பிற இந்திய மொழியினருக்கு இந்தி அயல் மொழி அல்ல' என்ற உணர்வையும் உருவாக்கும்.

"இந்திதான் 'இந்தியாவின் இணைப்புமொழி; இந்தியாவின் இணைப்பு மொழியாக இருக்கத் தக்கவகையில் இந்தியை வளப்படுத்தவேண்டும்" என்று நமது அரசியல் சாசனத்திலேயே எழுதப்பட்டிருக்கிறது; எனவே, இந்த வாய்ப்பை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியை நாடு முழுவதும் பரப்புவதற்கான வழி முறைகளை, 'இந்தி சிக்சா சமிதி' கண்டறிந்து கூறவேண்டும்; அப்படிக் கூறப்படும் வழிமுறைகளை மத்திய அரசு விரைந்து செயலாற்றும்.

இந்தி மொழி வழங்காத பகுதிகளில் உள்ள மக்கள், அவர்களாகவே இந்தியைக் கற்றுக்கொள்ளும் நிலையை நாம் உருவாக்கவேண்டும்; இந்தி மொழி கற்பிக்கும் நிலையங்களை நாடு முழுவதும் உருவாக்கவேண்டும்."

# கழகச் சட்ட திட்டத் திருத்தக் குழுக் கூட்டம்

14-6-72 அன்று சென்னையில் நடைபெற்ற தி. மு. கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் அமைக்கப்பட்ட கழகச் சட்ட திட்டத் திருத்தக் குழுவின் முதல் கூட்டம், 28-7-72 வெள்ளி மாலை 5-மணியளவில், சென்னை—அண்ணா சாலை தி. மு. க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில், குழுத் தலைவரும்—துணைப் பொதுச்செயலாளருமான திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

க. இராசாராம்,

அமைப்பாளர், கழகச் சட்ட திட்டத் திருத்தக் குழு

# தர்மபுரி மாவட்ட தி. மு. கழக மாநாட்டுத் தீர்மானங்கள்

கடந்த ஜூன் 17 18 ஆகிய நாட்களில் தர்மபுரியில் நடைபெற்ற தர்மபுரி மாவட்ட தி. மு. க. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது:

## இரங்கல்

தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் காஞ்சி மணிமொழியார், சேலத்துப் பெரியார் ஜி. பி. சோமசுந்தரம், சிற்றுளி சுப்பிரமணியம், ஜலகண்டபுரம் கண்ணன், ஆர். வி. கணபதி, அரூர் எச். ஆர். வேதகிரி, தர்மபுரி சு. தியாகராசன், கிருஷ்ணகிரி சின்னசாமி, குந்தாரப்பள்ளி நாராயணன், சென்னை பிரதாப் சந்திரன் ஆகியோர் மறைவு குறித்து இம்மாநாடு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

## மாநில சுயாட்சி

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும்--பாதுகாப்புக்கும் மேலும் வலிவு தரும வகையில் மத்திய அரசு பலமுள்ளதாகவும், மாநில அரசுகள் மக்களுக்கு வளம் பெருக்கும் வகையில் அதிகார உரிமைகளைப் பெற்றவைகளாகவும் விளங்கும் வண்ணம் தி. மு. கழகம் கோரிவருகின்ற மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு மத்திய அரசு செவிமடுத்து, இராசமன்னார் குழு அறிக்கையின் அடிப்படையில் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்: எம். வி. கரிவேங்கடம் எம்.எல்.ஏ
வழி: என். மாணிக்கம் எம்.எல்.ஏ
ஆர். சின்னச்சாமி எம்.எல்.ஏ
எஸ். ஏ. சின்னராசு எம்.எல்.ஏ

## அரசுக்கு நன்றி

தர்மபுரி மாவட்டத்தின் வறட்சி நிலை போக்கவும் -- பின்தங்கிய நிலையை அகற்றவும் மாநில அரசு பெருமுயற்சி எடுத்து, மத்திய அரசிடமிருந்து இரண்டு கோடி ரூபாய் பெற்றுத் தந்தமைக்காக இம்மாநாடு தனது நன்றியைத் தமிழக முதல்வர் அவர்களுக்கும் -- அரசுக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

முன்: கே. மதிவாணன்
வழி: பி. ஆர். ஆஞ்சநேயன்
கே. சமரசம்

## ஊத்தங்கரை வட்டத்தில் நூற்பு ஆலை

தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை வட்டத்திலும் மற்றும் சில பகுதிகளிலும் சுமார் ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள தரமான பருத்தி விளைவிக்கப்படுகிறது; விளைகின்ற பருத்தி விற்பனைக்கு திருப்பூர் - பெருந்துறை -- கோவை -- சேலம் ஆகிய ஊர்களுக்கு எடுத்துச் சென்று விற்கப்படுகிறது; இவ்வளவு பருத்தி விளைகின்ற ஊத்தங்கரை வட்டத்தில் அரசு சார்பிலோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமோ நூற்பு ஆலை ஒன்றை நிறுவுவது பற்றி பரிசீலிக்குமாறு இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: சென்னகேசவன்
வழி: த. குட்டியப்பன் எம்.சி.
டி. தண்டாயுதபாணி
குள்ளப்பன்

## மூன்று மாநிலங்களை இணைக்கும் இரயில் பாதை

தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நல்ல வியாபார முக்கியத்துவம் பெற்ற நகரம்; ஏற்கனவே கிருஷ்ணகிரியிலிருந்து திருப்பத்தூருக்கு ஓடிக்கொண்டிருந்த இரயிலும் எடுக்கப்பட்டுவிட்டது; கிருஷ்ணகிரியை மையக் கேந்திரமாக வைத்துப் புதுவை -- திண்டிவனம் -- திருவண்ணாமலை -- ஊத்தங்கரை --- திருப்பத்தூர் -- ஒசூர் ஆகிய ஊர்களின் வழியாகப் பெங்களூருக்கு இரயில்பாதை அமைக்கவேண்டுமென மத்திய அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது; இந்தப் பாதை, தமிழகத்தின் நடு மையமாகப் போடுகின்ற பாதையாகவும் -- இலாபகரமானதாகவும் -- மூன்று மாநிலங்களை இணைப்பதாகவும் அமையும்; இதன் முக்கியத்துவத்தை மத்திய அரசு உணர்ந்து உடனடித் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: சி. மன்னியப்பன் எம்.எல்.ஏ.
வழி: ஆறுமுகம்
டி. கே. கோபால்

## பள்ளிகளில் தமிழ் வகுப்பு

ஒசூர் -- தேன்கனிக் கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் தமிழ்ப் பிரிவு இல்லாத காரணத்தால் தமிழ்ப் பிள்ளைகளும் தெலுங்கு மட்டுமே படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது; ஆகவே, அங்கு ஏற்கனவே உள்ள தெலுங்குப் பிரிவோடு ஒவ்வொரு பள்ளியிலும் தமிழ்ப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தி, அங்குள்ள தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு உதவுமாறு இம்மாநாடு அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன்: ஆர். எஸ். கண்ணன்
வழி: தேன்ராமசாமி
இராதாகிருஷ்ணன்

## புதிய தொழிற்சாலை

தர்மபுரி வட்டம் பாப்பாரப்பட்டியை அடுத்துள்ள பிக்கிலிதம்பிரான் மலைகளில் 'Corandum' எனப்படும் குருந்தக் கல் கிடைப்பதால்—அதைப் பயன்படுத்தி அங்கு ஒரு தொழிற்சாலை நிறுவி -- பிற்பட்ட இம்மாவட்டத்தில் தொழில் வளம் பெருகத் துணை செய்ய அதனைப் பரிசீலிக்க வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: கணபதி
வழி: மா. செ. சஞ்சீவி
சி. கிருஷ்ணன்
எம். ஏ. நடராசன்

## புதிய கால்வாய்

பஞ்சப்பட்டி சின்னாறு அணையிலிருந்து பாலக்கோடு வழியாக தர்மபுரி ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்ல முக்கியக் கால்வாய் அமைக்கும் திட்டம் உள்ளது; அந்தக் கால்வாயில் பாலக்கோட்டிலிருந்து துணைக் கால்வாய் ஒன்று பிரித்து, எர்ரப்பட்டி -- திருமல்வாடி -- கிட்டனஹள்ளி -- பனைகுளம் -- பாப்பாரப்பட்டி வழியாகத் தண்ணீர் செல்லத்தக்க வகையில் அமைத்து அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு வாழ்வளிப்பதோடு மட்டுமல்லாமல் நீரின்மையால் வறண்டு கிடக்கும் அந்தப் பகுதியை வளப்படுத்துவது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென அரசினை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

முன்: எம். பி. முனுசாமி
வழி: மல்லமுத்து

## அரூரில் கலைக் கல்லூரி

தர்மபுரியிலுள்ள கலைக் கல்லூரி, அரூர் பகுதியிலிருந்து வரும் மாணவர்களுக்கு இடம் தந்து உதவ முடியாத நிலையில் இருப்பதாலும், அரூர் பகுதியிலிருந்து மாணவர்கள் வெளியே வந்து தங்கி படிக்கக்கூடிய வசதி -- வாய்ப்பு அற்ற தன்மையில் இருப்பதனாலும், அரூரில் கலைக் கல்லூரி ஒன்றினைத் தொடங்க அரசு ஆவன செய்யும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: ஈ கே. வேங்கன்
வழி: சென்னகேசவன்
டாக்டர் ஆறுமுகம்
சி. மாணிக்கம்
மோச்சம்பள்ளி முருகன்

## பாரூரில் தொலைபேசி -- தந்தி நிலையம்

பாரூரில் தொலைபேசி நிலையமும்-- தந்தி நிலையமும் ஏற்படுத்த உத்தரவாகி நெடுநாட்களாகிவிட்டது; ஆனால், இதுவரை அவை ஏற்படுத்தப்படவில்லை; பொது மக்கட்கு இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன; எனவே, தொலைபேசியும் -- தந்தி நிலையமும் உடனடியாக வைத்துத் தர வேண்டுமென்று மத்திய அரசினை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: வேலம்பட்டி சஞ்சீவி
வழி: டி. கே. சுப்பிரமணியன் பாரூர்
பா. ச. ஜெகதீசன்
கே. முருகேசன்

## ராகிமால்ட் தொழிற்சாலை

கெலமங்கலம், தேன்கனிக் கோட்டை ஆகிய வட்டங்களில் ஏராளமான கேழ்வரகு உற்பத்தி ஆவதால், அதனைப் பயன்படுத்துகின்ற வகையில் அரசுத் துறையிலோ -- கூட்டுறவுத் துறையிலோ ராகி மால்ட் தொழிற்சாலை ஒன்று அமைப்பது பற்றி பரிசீலிக்குமாறு அரசினை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: தண்டாயுதம்
வழி: இராதாகிருஷ்ணன்

## உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம்

பேரிகை, சூளகிரி பகுதியில் சுமார் 5,000 ஏக்கர் நிலத்தில் தற்போது உருளைக்கிழங்கும், மேல்நாட்டுக் காய்கறி வகைகளும் பயிராகின்றன; இதை இன்னும் அதிகமான பரப்பளவில் பயிரிடுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன; உருளைக்கிழங்கு விதையை ஒவ்வொரு முறையும் விவசாயிகள் சிம்லாவிலிருந்து அதிகப் பொருள் செலவில் கொண்டு வந்து உடனடியாகப் பயன்படுத்த வேண்டிய சங்கடங்களில் உள்ளனர்; எனவே, அந்த விதையை உற்பத்திச் செய்து குளிர்ப்பதன அறையில் வைத்துத் தருகின்ற வகையில் உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றினையும், குளிர்பதன அறை ஒன்றினையும் அந்த வட்டாரத்திற்கு அமைத்துத் தருவது பற்றி பரிசீலிக்கும்படி இம்மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

முன்: பெரும்பாக்கன்
வழி: புலவர் அரசி
இராமலிங்கம்

## நெசவாளர்கட்குக் கூட்டுறவு முறையில் வீடு

1963—64 சீனப் போரின்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கூட்டுறவு நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தை மீண்டும் துவக்கித் துரிதமாக நிறைவேற்றித் தரும்படி அரசினை இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: கே. எம். தங்கவேலு
வழி: த. பெரியசாமி
சேதுராசன்

## புளிய இலையிலிருந்து டார்டரிக் அமிலம் இறக்கும் தொழிற்சாலை

தர்மபுரி மாவட்டத்தில் ஏராளமாகப் புளியமரங்கள் இருக்கின்றன; புளியம் இலையிலிருந்தும் -- புளியம்பழத்திலிருந்தும் டார்டாரிக் அமிலம் தயாரிக்க இயலுமென்பது தற்போது விஞ்ஞான ரீதியாக நிரூபணமாகியுள்ளது; தற்போது டார்டாரிக் அமிலம் ஏராளமாக இறக்குமதி ஆகிறது; அதற்கென ஒரு தொழிற்சாலை இம்மாவட்டத்தில் நிறுவுவதன் மூலம் நல்ல அளவுக்கு அந்நிய செலாவணியை மீதப்படுத்த இயலும்; எனவே, அரசு இதற்கெனத் தக்க நடவடிக்கை எடுத்து ஒரு தொழிற்சாலையை நிறுவுவது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

## மரவள்ளிக்கிழங்கிலிருந்து குளுக்கோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை

தர்மபுரி மாவட்டத்தில் ஏராளமாகக் குச்சுவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகிறது; குச்சுவள்ளிக் கிழங்கிலிருந்து துணி ஆலைகளுக்குத் தேவையான ஸ்டார்ச்சும், 'குளுக்கோஸ்-D'யும் தயாரிக்க இயலும்; இதற்கான தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டால் மேலும் விவசாயிகள் ஏராளமான நிலத்தில் குச்சுவள்ளிக் கிழங்கு பயிரிட முன்வருவார்கள்; பல்வேறு மக்களுக்கு வேலை வாய்ப்பினைத் தரக்கூடிய இத்திட்டத்தினை அரசு ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: கடத்தூர் இராமநாதன்
வழி: அரங்கநாதன்

## குடிநீர்ப் பஞ்சம் போக்கியமைக்கு பாராட்டு

நீண்ட பல ஆண்டுகளாகத் தர்மபுரி, கிருஷ்ணகிரி நகராட்சிகள் குடிதண்ணீருக்கு நிரம்ப சங்கடத்தை அடைந்து கொண்டிருந்தன; அந்தச் சங்கடம் அறவே நீங்குகின்ற வகையில், தர்மபுரி-- கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு நகராட்சிகட்கும் சுமார் ரூ. 1½ கோடி செலவில் குடிநீருக்கு வழிவகை செய்துள்ள தமிழக அரசை இம்மாநாடு உளமாரப் பாராட்டுகிறது.

முன்: தா. வே. வடிவேலன்
வழி: மத்தூர் எம்.எஸ். சண்முகம்
நெடுமாறன்

## நூல் விலை ஏற்றத்தைத் தடுக்கக் கோரிக்கை

அண்மையில் நூல் விலை ஏறியுள்ளது; இவ்விலையேற்றத்தைக் கைத்தறித் தொழில் தாங்காது; எனவே, விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தி -- குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: த. குட்டியப்பன்
வழி: பி. எஸ். முருகேசன்

## இந்தித் திணிப்புக்குக் கண்டனம்

இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் பொதுவாக நாடெங்கிலும்—குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் வளர்ந்துவரும் உணர்வை இந்தியப் பேரரசு புறக்கணிக்கும் வகையில், 'இனி மத்திய அரசின் உயர்மட்ட நிர்வாகத்தில் இந்தியிலேயே கடிதங்கள் எழுத வேண்டும்' என்று மத்திய உள்துறை இலாகா சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாக நாளிதழில் செய்தி வெளியாகியிருக்கிறது; இந்த உத்தரவு, இந்தி பேசாத மக்களுக்கு அநீதியைச் செய்வது மட்டுமல்லாமல் -- பண்டித நேரு அவர்கள் அளித்த வாக்குறுதியை மீறுவதாகவும் இருப்பதால், இந்த உத்தரவை மத்திய அரசு உடன் திரும்பப்பெற வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்: ஆர். பி. உலகநம்பி எம்.பி.
வழி: மாதாகவுண்டர் எம்.பி.
ப. ச. தமிழரசன்

## ஆளும் காங்கிரசு போக்கிற்கு கண்டனம்

மத்திய அரசின் வரவு -- செலவுத் திட்ட அறிக்கையையொட்டி, மண்ணெண்ணெய் -- பம்புசெட் -- உரம் ஆகியவற்றின் மீது வரிகள் உயர்த்தப்பட்டபோது அவைகள் விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் என்று தி. மு. கழகமும் -- மற்ற எதிர்க் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் கடுமையாகச் சுட்டிக் காட்டியும் அந்த வரிகள் கைவிடப்படவில்லை.

மண்ணெண்ணெய்மீது லிட்டருக்கு 4 காசு வரி உயர்வும், பம்ப்செட்மீது 25 சதவீதமும் வரி உயர்வும், உரத்தின்மீது 5 சதவீதம் தீர்வை உயர்வுமாக மத்திய அரசு அதிக வரி விதித்தது.

இதை நியாயமானதும் -- தேவையானதுமான வரி உயர்வு என்று ஒத்துக்கொண்டு வாதிக்கின்ற மத்திய அரசின் அமைச்சர்களும், ஆளும் காங்கிரசுக் கட்சியினரும் தமிழ் நாட்டில் மின் கட்டணத்தை 10.8 காசிலிருந்து 1.2 காசு உயர்த்தி 12 காசாக ஆக்கியதை வன்மையாகக் கண்டித்தும் -- நிலப் பிரபுக்களோடு சேர்ந்துகொண்டு விவசாயிகளைத் தூண்டிவிட்டும்-- கிளர்ச்சிகளில் நேரடியாகத் தங்கள் கட்சியின் சார்பில் சார்ந்து கொண்டிருப்பது, 'வேண்டுமென்றே காங்கிரசு அல்லாத ஒரு அரசின்மீது வெறுப்பை உருவாக்க வேண்டுமென்று செய்யப்படுகின்ற காரியம்' என்று இம் மாநாடு கருதுகிறது.

புதிய காங்கிரசு ஆளுகின்ற மாநிலங்களில் மின் கட்டணம் 16 காசு—25 காசு என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறதே யல்லாமல், எந்த மாநிலத்திலும் 12 காசுக்குக் குறைவான மின் கட்டணம் இல்லை; இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினரும் அந்த மாநிலங்களில் உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டணங்களுக்காக எவ்வளவு எதிர்ப்பும் காட்டியதில்லை.

மின் கட்டணம் உயர்த்தப்படுவதன் மூலமாகத்தான் மின்வாரியத்திற்கு ரிசர்வ் வங்கியிலிருந்தும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் பெறக்கூடிய கடன்களைப் பெற முடியும் என்பதை மற்ற எதிர்க் கட்சிகள் உணரும் வாய்ப்பு இல்லாவிட்டாலும், ஆளும் காங்கிரசுக் கட்சிக்கு உணரக்கூடிய வாய்ப்பு இல்லாமற் போய்விடவில்லை.

தமிழகத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி வழங்கும் மிகப் பெரிய திட்டத்திற்கு ஏற்படும் ரூ. 50 கோடிக்கு மேற்பட்ட செலவையும் -- புதிதாகப் பல இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஆகும் பெரும் செலவையும் கணக்கிட்டுப் பார்த்தால், தமிழக அரசு மின் கட்டணத்திற்கு உயர்த்தியுள்ள இந்த ஒரு காசு பெரிய உயர்வல்ல; அதிலும், ஆழமான கிணறுகளுக்கு மின்சார செலவு அதிகமாவதைக் கணக்கிட்டு, யூனிட்டுகள் அடிப்படையில், 'சிலாப்சிஸ்ட'த்தில் சலுகைகள் அளிப்பதற்கு முதலமைச்சர் ஏற்கனவே அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்.

இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகும், ஏதாவது ஒரு கிளர்ச்சியை நடத்த வேண்டுமென்ற பிடிவாத உணர்ச்சியுடன் மாலங்களுக்கு வெடிகுண்டுகள் வைத்தல் -- 'டிரான்ஸ்பார்மர்'களைச் சேதப்படுத்த முனைதல் போன்ற சதி வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கட்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் இங்குள்ள ஆளும் காங்கிரசுக் கட்சி தீர்மானங்கள் நிறைவேற்றி -- கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பதும், இந்தக் கிளர்ச்சி நீடிப்பதற்காகவும் வலுப்பெறுவதற்காகவும் தமிழகத்தைச் சேர்ந்த சில மத்திய அரசு அமைச்சர்கள் மறைமுகமாகத் தூண்டுதல் செய்வதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

வேண்டுமென்றே, அரசுக்கு விரோதமாகத் தூண்டிவிடப்படும் இந்தக் கிளர்ச்சியில், சட்

(4-ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் -- அமைதி -- ஒழுங்கு காப்பாற்றப்பட எடுக்கப்படும் நடவடிக்கைகளில் பொதுமக்கள் இப்போது அளித்துவரும் ஆதரவைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: அன்பில் தர்மலிங்கம்
வழி: கந்தப்பன் எம்.எல்.ஏ.

# வறண்டுவிட்ட தென்னேரிக்குத் தண்ணீர் வரும்

## ரூ.12லட்சம்செலவில் செப்பனிடும் வேலை துவங்கும்

### அமைச்சர் சாதிக் பாட்சா நேரில் பார்வையிட்டு உத்தரவு

காஞ்சிபுரம், ஜூலை 21—

"காஞ்சிபுரத்தை அடுத்த தென்னேரி ஏரியை ஆழப்படுத்தவும்-- கால்வாய்களைச் செப்பனிடவும் ரூ 12 இலட்சம் செலவிடப்படும்" என்று பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தெரிவித்தார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளில் தென்னேரி ஏரியும் ஒன்று; இந்த ஏரியால் 32 கிராமங்களில் 7,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது; அண்மையில் இந்த ஏரி தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டது.

அந்த ஏரியை அமைச்சர் சாதிக் பாட்சா பார்வையிட்டார்; அவருடன், மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி, வட்டச் செயலாளர் டி. சீனிவாசன், குன்னத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எம். கோபால், வாலாசாபாத ஒன்றியத் தலைவர் ஆர். கோபால், டி. எஸ். வீரராகவன் ஆகியோர் சென்றனர்.

ஏரியின் தண்ணீர் வாத்து கால்வாய்கள் தூர்ந்து கிடப்பதைக் கண்டு, கால்வாய்களைச் செப்பனிட ரூ. 2 இலட்சமும் -- ஏரியை ஆழப்படுத்த ரூபாய் 10 இலட்சமும் -- ஆக ரூ. 12 இலட்சம் இந்த ஏரிக்குச் செலவிடப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

முதல் கட்ட வேலையாகத் தண்ணீர் வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்; 'இரண்டாவது கட்டமாக ஏரியை ஆழப்படுத்துங்கள்' என்று கூறினர்.

(3-ம் பத்தித் தொடர்ச்சி)

தியத் தாய்க் குலத்துக்கே இழுக்காகும்; இயல்புக்கு மாறான மனநிலைக்கு இது ஓர் அடையாளம்; பெண்கள் கல்லூரிகளில்கூட இந்தப் பழக்கம் இருப்பதைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன்; மாணவர்களை, மாணவிகள் இதில் 'காபி' அடிக்கிருர்கள். அதுவும் எக்காளத்தோடு இதைச் செய்கிருர்கள்" என்று அவர் வருத்தத்தோடு சொன்னர்.

ஓர் ஆண்டுக்கு முன்பு சேவா கிராமம் மருத்துவர் கல்லூரியில் 'ராகிங்' பழக்கத்தை எதிர்த்து அவர் போராடினும்'

# நவீன முறையில் முந்திரி உற்பத்தி

## தமிழக அரசின் தீவிர யோசனை

### முந்திரி வளர்ச்சி வாரியம் உருவாகும்

மத்திய அரசு -- நாட்டுடைமை பாங்கிகளிடமிருந்து நிதியுதவி பெறத் திட்டம்

வேலூர், ஜூலை 21—

தமிழகத்தில் முந்திரி வளர்ச்சி வாரியம் ஒன்றை அமைக்க அரசு தீவிரமாக யோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

நவீன முறைகளைக் கடைபிடித்து முந்திரி உற்பத்தியைப் பெருக்க இந்த வாரியம் உதவி செய்யும் என்று கருதப்படுகிறது.

"இந்த ஆண்டு முந்திரி உற்பத்தி மூலம் காட்டு வளர்ச்சித் துறைக்கு ரூ. 20-இலட்சம் வருமானம் கிடைக்கும்"

என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசிடமிருந்தும், நாட்டுடைமை பாங்கிகளிடமிருந்தும் நிதியுதவி பெறுவதே, இந்த வாரியம் அமைப்பதன் முக்கிய நோக்கமாகும்.

திருச்சி, தென்னற்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில், வன இலாக்கத் துறை பெருமளவில் முந்திரி சாகுபடி செய்துவருகிறது; அமைக்கப்படவிருக்கும் வாரியம் இப்பகுதிகளில் தனி அக்கறை செலுத்தும்."

கேள்வி :— 'முந்திரிப் பருப்பைப் பதப்படுத்தும் பணியில், இந்த வாரியம் ஈடுபடுமா?"

பதில் :— 'இப்போதுள்ள முந்திரியைப் பதப்படுத்தும் ஆலைகளுக்கே தற்போதைய உற்பத்தி போதவில்லை; ஆகவே, இப்பணி தற்போது மேற்கொள்ளப்படமாட்டாது.

"முதல் தடவையாக இந்த ஆண்டு பெரும் அளவில் முந்திரி கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது; இது, பல்வேறு பகுதிகளின் உற்பத்தி அளவையும் கண்டறிய உதவுகிறது."

## கல்கத்தா நகரெங்கும் நக்சல் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் போலீசார் கைது செய்தனர்.

நக்சல்பாரித் தலைவரான சாரு மசும்தார் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இரு போலீசார் குத்திக் கொலை செய்யப்பட்டதற்கு இந்தத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளே காரணமாக இருக்கும் என்று போலீசார் நம்புகின்றனர்.

மேற்கு வங்கத்தின் எல்லா மாவட்டங்களிலும் உள்ள தீவிரவாதிகள் அனைவருமே அநேகமாகக் கைது செய்யப்பட்டுவிட்டதாக உயர்தரப் போலீசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயினும், 'புதிதாகப் பலரும் இப்போது இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கக்கூடும்' என்று அவர் கூறினர்; இவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

"தீவிரவாதிகள் சிறைகளை உடைத்து வெளியேருமல் இருக்க எல்லா சிறைகளும் ரூ. 10 இலட்சம் செலவில் பலப்படுத்தப்பட்டு வருகின்றன" என்று சிறைத் துறை அமைச்சர் அறிவித்தார்.

## அரசாங்கச் செலவில் குளிர் சாதன வசதி

### ம. பி. அமைச்சர்கள் வீட்டிலும் ஏற்படுத்தப்படுமாம்

போபால், ஜூலை 21—

மத்தியப் பிரதேச அமைச்சர்களின் வீடுகளில் படுக்கை அறை —வீட்டில் அவர்கள் அலுவலகமாகப் பயன்படுத்தும் அறை இரண்டிலும் அரசு செலவில் குளிர் சாதனங்கள் (ஏர் கண்டிஷனர்) வைக்கப்படும்.

இதற்காக வரவு--செலவுத் திட்டத்தில் ரூ. 1,02,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகத்தில் அமைச்சர்களின் அறைகளுக்குக் குளிர் சாதனங்கள் வைப்பதற்காக ரூ. 72,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## மாணவிகளிடையும் 'ராக்கிங்' பழக்கம்

### காந்தியார் மருமகள் எதிர்ப்பு

நாகபுரி, ஜூலை 21—

காந்தியாரின் மருமகளும் -- பெயர் பெற்ற சமூக ஊழியருமான நிர்மலா பென் காந்தி (வயது 55) தன்னந்தனியாக 'ராக்கிங்' பழக்கத்தை எதிர்த்தும் போராடுவதற்காக தற்போது இங்கு வந்திருக்கிருர்.

"மாணவிகள்கூட 'ராக்கிங்' பழக்கத்தைக் கடைபிடிப்பது இந்

(1-ம் பத்தி பார்க்க)

## மிருகக் காட்சிசாலை வண்டலூருக்கு மாற்றம்?

மிருகக் காட்சி சாலை மாற்றம் பற்றி அதிகாரி கூறியதாவது:—

"சென்னை நகரிலுள்ள மிருகக் காட்சிசாலையை வண்டலூருக்கு மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

"இப்போது மிருகக் காட்சி சாலை அமைந்திருக்கும் இடத்தை இரயில்வே அதிகாரிகள் கேட்டு வருகின்றனர்."

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

**23--7--72**

**இச்சிப்பாளையம்**

27-வது வட்ட தி. மு. க. சார்பில் கலைஞர் பிறந்த நாள் விழா; மாலை 6 மணிக்கு பிரசவ விடுதி அருகில்; தலைவர் : சிந்தாமைதீன்; பேசுவோர் : சி. தமிழரசி எம்.சி., ஈ. ஆர். கிருட்டினன் எம்.பி, கே. செயராமன் எம். எல்.ஏ., எ. மாரியப்பன் எம்.சி, ஆ. சின்னையன், பி எஸ். மாணிக்கம் எம்.சி., கே. துரைசாமி எம்.சி., பெ. இராசமாணிக்கம், கே. பி. சாமி, சி சுப்ரமணியம் மற்றும் பலர்.

**சிதம்பரம்**

நகர தி. மு. க. சார்பில் டாக்டர் நாவலர் பிறந்த நாள் விழா; மாலை 6 மணிக்கு டவுன் ஆலில்; தலைவர் : எல். தியாகராசன்; பேசுவோர் : நன்னிலம் நடராசன, வி. வி. சாமிநாதன் எம்.பி., பொன். சொக்கலிங்கம் எம் எல். ஏ., இரத்தின. பாலகுருசாமி, கோ. துரைராசன், புலவர் முத்து, மற்றும் கழக முன்னணியினர் -- நகராட்சி உறுப்பினர்கள்.

# இந்தியா -- பாகிஸ்தான் அடுத்த உயர்மட்டப் பேச்சுவார்த்தை

## ஆகஸ்டில் நடைபெற பாகிஸ்தான் விருப்பம்

இஸ்லாமாபாத், ஜூலை 21--

இந்தியா -- பாகிஸ்தான் தலைவர்களுக்கிடையேயான அடுத்த உயர்மட்டப் பேச்சுவார்த்தை வரும் ஆகஸ்டுத் திங்களில் நடைபெற வேண்டுமென்று பாகிஸ்தான் விரும்புகிறதாம்.

இந்தச் சந்திப்பு குறித்த ஏற்பாடுகளைக் கவனிக்க இரு நாடுகளின் அதிகாரிகளும பாகிஸ்தானில் சந்திக்கலாம் என்றும பாகிஸ்தான் அரசு கருத்துத் தெரிவித்திருக்கிறது.

இந்தத் திங்கள் 3-ம் நாள் சிம்லாவில இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்துக்குப் பாகிஸ்தான தேசியச் சட்டமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டதால், மேற்கண்ட யோசனையைப் பாகிஸ்தான இந்தியாவுக்குத் தெரிவித்திருக்கிறது.

## வங்கதேசத்துக்கு 22,000 டன் அரிசி

வங்க தேசத்துக்கு 22,000 டன் அரிசியைத் தந்துதவுவதாகப் பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்த இந்த அரிசியை வங்க தேசத்துக்குக் கொண்டு சேல்லும் ஏற்பாடுகளை ஐ. நா. நிவாரணப் பணிக் குழு மேற்கொள்ளும் என்று ஐ நா.-வில் உள்ள பாகிஸ்தான தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.

## காவிரி நீர்ப் பங்கீட்டு உரிமை

### நிலைமைகளைகண்டறிய வந்துள்ள குழுவிடம் தமிழக அமைச்சர் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 21—

காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை குறித்து நிலைமைகளைக் கண்டறிந்து விவரங்களைத் திரட்டுவதற்காக நியமிக்கப்பட்ட மத்திய அரசு குழு சென்னையில் பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக பாட்சா -- தமிழக அதிகாரி ஆகியோரைச் சந்தித்து விவாதித்தது.

தமிழகத்தின் தற்போதைய பாசன உரிமைகளைப் பாதுகாத்து நிலைநிறுத்தவேண்டியதன் அவசியத்தை மத்திய குழுவினரிடம் அமைச்சர் சாதிக்பாட்சா வலியுறுத்தினர்.

குழுவினர், தஞ்சை -- மேட்டூர் -- ஒகேனக்கல் ஆகிய இடங்களுக்கும் சென்றுவிட்டு 22-ம நாள் டில்லி திரும்புமுன் மீண்டும் அமைச்சர் சாதிகபாட்சா அவர்களைச் சந்தித்து விவாதிப்பார்கள்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணுமதுரை :- குஞ்சு என்கிற கருப்பையா

அழகாபுரி :—நம்மாழ்வார்

சாத்தூர் :—சீனிவாசன்

மெத்தநாயக்கன்பாளையம் :—ஆறுமுகம், சாந்தமூர்த்தி, இராமன், கோவிந்தராசு, மணி, சின்னப்பன், விவேகானந்தன், பிச்சைமுத்து.

ஆத்தூர் :—இராமசாமி

அருப்புக்கோட்டை :—கிருஷ்ண ரெட்டியார்

கடைசி இரண்டு பேரும் கலவரத்தில் நடந்த தடியடியின்போது நெரிசலில் சிக்குண்டு இறந்தவர்கள்.

இராசபாளையத்தில், இராமசாமி என்ற தலைமைப் போலீசுக்காரர் தற்செயலாகத் துப்பாக்கி வெடித்ததன் விளைவாக இறந்திருக்கிருர்.

இந்தப் பதினேழு பேர் குடும்பங்களுக்கும் மனிதாபிமான உணர்வுடன், முதலமைச்சர் நிதியிலிருந்து தலா ரூ. 5,000 வழங்க முன்வந்திருக்கிருர் கலைஞர்.

இந்தப் பதினேழு பேர் தவிர, மேலும் பலர் இறந்திருப்பதாக மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காகத் திருவாளர் வீரபாகு, '22 பேர்கள் இறந்திருக்கின்றனர்' என்று நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் நாணயமான அரசியல்வாதியாக இருப்பாரானல், எஞ்சிய 5 பேர்களின் விவரத்தை வெளியிட வேண்டும்; இல்லையேல் வாயைப் பொத்திக்கொண்டு வேறு வேலையில் ஈடுபட வேண்டும்.

ஒரு பொய்யைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால் அது மெய்யாகிவிடும -- என்ற நாஜிகளின் தத்துவத்தை இங்கும் கடைபிடிக்க இந்திரா கட்சியினர் முனைவார்களானல், நாஜிகளுக்கு ஏற்பட்ட முடிவைத்தான் இவர்களுக்கும் நாட்டு மக்கள் வழங்குவார்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

மா. சே.

# கோவை நகர தி.மு.க. தோழர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை ரத்து

1970-ல் நடைபெற்ற கோவை நகராட்சித் தேர்தலின்போது, கழகக் கட்டுப்பாடு -- ஒழுங்குமுறைகளுக்கு மாருக நடந்து கொண்டனர் என்ற காரணத்துக்காக 17-12-70-ல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட கீழ்க்காணும் தோழர்கள் 10 பேரும் தங்கள் செயலுக்காக வருத்தம் தெரிவித்தும், கழகத்தின் உறுப்பினர்ம் பொறுப்பில் தொடர்ந்து இருப்பவர்களாகக் கருதுமாறும் மாவட்டச் செயலாளர்மூலம் தலைமைக் கழகத்தை வேண்டிக் கொண்டதற்கேற்ப, உரிய பரிசீலனையின்பேரில் கீழ்க் குறிப்பிட்டுள்ள தோழர்கள் 10 பேரும் கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பில் மட்டும் தொடர்ந்து பணியாற்றி வருவர் என்பது இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சாதாரண உறுப்பினர்ப் பொறுப்பில் மட்டும் தொடர்ந்து பணியாற்ற அனுமதியளிக்கப்படும் கோவை நகரக் கழகத் தோழர்கள் :—

1. நாராயணசாமி (7-வது வார்டு)
2. ஆர். என். கோவிந்தசாமி
3. எஸ். பி. வென்சுலால்
4. சி. குமாரசாமி (12 வது வார்டு)
5. நா. சுப்பிரமணியம் (21-வது வார்டு)
6. பச்சையப்பன் (23-வது வார்டு)
7. க. பாலசுந்தரம் (26-வது வார்டு,
8. ஏ. காந்தி (31-வது வார்டு)
9. டி. முருகன (33-வது வார்டு)
10. என். பாலகிருஷ்ணன் (34-வது வார்டு)

'அறிவகம்' சென்னை—13
20—7—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]